ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 11,680 — 1959 පෙබරවාරි 27 වැනි සිකුරාදා — 27.2.1959

11,680 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV — உள்ளூர் ஆட்சி

## துணை விதிகள்

L.G.D.—BB. 435.

### ஆடுமாடடிப்போர் சட்டம்

ஆடுமாடடிப்போர் சட்டத்தின் (அத்தியாயம் 201) 22 ம் பிரிவின்படி, அதற்கான தக்க அதிகாரியால், அதாவது, வெலிகாமம் நகரின் அலுவல்களைப் பரிபாலிப்பதற்கு நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரியால், ஆக்கப்பட்டு, குறித்த பிரிவு தம்மிது வைத்த தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சரால் உறுதிப்படுத்தப் பட்ட பிரமாணம்.

வீ. சி. ஜயசூரியா,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி, கலாசார விவகார அமைச்சு.

கொழும்பு,
1959 ம் ஸு பெப்ருவரிமீ 7 ந் உ.

#### பிரமாணம்

1935 ம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ந் திகதி வெளியான 8,175 ம் இலக்க "கெசெற்"றில் பிரசுரிக்கப்பட்டு, 1958 ம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ந் திகதி வெளியான 11,236 ம் இலக்க "கசெற்"றில் பிரசுரமான பிரமாணத்தால் கடைசியாகத் திருத்தப்பட்ட பிரமாணங்கள், அவற்றின் 10 ஆம் பிரமாணத்துக்குப் பதிலாக கீழ்க்காணும் புதிய பிரமாணத்தை வைத்து இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

"10. (1) வெலிகாமம் நகரின் அலுவல்களைப் பரிபாலிப்பதற்கு நியமிக்கப்பட்ட விசேஷ அதிகாரியிடம் அல்லது வெலிகாமம் நகருக்கு ஒரு நகர சங்கம் அமைக்கப்படுங்கால், அந்த நகர சங்கத்திடம்—

(அ) ஒவ்வொரு மாட்டுக்கும், ஆடுமாடடிக்கும் கொட்டிலை உபயோகிப்பதற்கும், 1 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் இடத்தில் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலத்துக்கு காட்டுவதற்கும் ரூபா 4 வீதமும் ;

(ஆ) செம்மறியாடு, வெள்ளாடு அல்லது பன்றி ஒவ்வொன்றுக்கும், ஆடுமாடடிக்கும் கொட்டிலை உபயோகிப்பதற்கு ரூபா 2 வீதமும் கட்டணங்கள் முதலில் கொடுக்கப்படவேண்டும்.

(2) 1 ம் பிரமாணத்தில் சொல்லப்படும் இடத்தில் காட்டுவது 24 மணித்தியாலங்களுக்கு மேல் நீடிக்குமாயின் ஒவ்வொரு மாட்டுக்கும் மேலதிகமான ஒவ்வொரு 24 மணித்தியாலத்துக்கும் அல்லது அதற்குட்பட்ட கால அளவு ஒவ்வொன்றுக்கும் மேலும் ரூபா 2 கட்டணமாக செலுத்தவேண்டும்."

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது